# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண். 19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம்,
சென்னை-600035, தொலைபேசி எண்: 044-29515580

**ஆணை எண். SA 8286/C/2020** **நாள்: 18.06.2021**

முெ.ஸ்ரீதர் பி.டெக்.,
மாநில தகவல்ஆணையர்

**ஆணை**

| | |
|---|---|
| மனுதாரரின் பெயர் | **திரு. பெ. கோகுல்** |
| தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)ன் கீழ் மனு | **நாள்: 04.07.2020**<br>**(இணைப்பு -1ஐ) காணவும்** |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் கடிதம் | — |
| துறையின் மேல்முறையீட்டு அலுவலரின் பதில் கடிதம் | — |
| ஆணையத்திற்கு மனுதாரரின் மேல்முறையீடு | **நாள்: 29.09.2020** |

2. மனுதாரர் ஆணையத்திற்கு அனுப்பிய முறையீட்டை பரிசீலனை செய்த பிறகு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ன்படி தகவல்கள் வழங்க தங்களால் நடவடிக்கை முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்று கருதப்படுகிறது.

3. **பொதுத் தகவல் அலுவலரின் கவனம் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-க்கு ஈர்க்கப்படுகிறது. அவற்றின் விவரங்களை இணைப்பு-2-ல் காணலாம்.** மேற்குறிப்பிட்ட பிரிவுகளின் கீழ் தங்கள் மீது நடவடிக்கை எடுக்க பரிசீலிக்கப்பட்டது.

4. அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன்னர் மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் அவற்றை **09.07.2021-க்குள்** வழங்க பொதுத் தகவல் அலுவலராகிய நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். அவ்வாறு வழங்கப்படும் பதில் / தகவல்/ஆவணம் மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் (RPAD) அனுப்பி வைக்கப்படவேண்டும். மனுதாரருக்கு அனுப்பப்படும் பதிலின் நகல் மற்றும் மனுதாரர் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை அட்டையின் நகல் (வழக்கு எண்ணை குறிப்பிட்டு) ஆகியவற்றை இணைத்து ஆணையத்திற்கு அனுப்பப்பட வேண்டும். அனுப்பப்பட வேண்டிய மின்னஞ்சல் முகவரி sic@nic.in

**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**அசு. சார்புச் செயலாளர்**

<u>பெறுநர்</u>

பொதுத் தகவல் அலுவலர்/
பவர்கிரிட் கார்பரேஷன் ஆப் இந்தியா,
தருமபுரி மெயின் ரோடு,
திருப்பத்தூர் மாவட்டம் - 635 601. **(இணைப்புடன்)**

**நகல்**

மேல்முறையீட்டு அலுவலர்/
பவர்கிரிட் கார்பரேஷன் ஆப் இந்தியா,
தருமபுரி மெயின் ரோடு,
திருப்பத்தூர் மாவட்டம் - 635 601.

SK_TY_18/06/2021

<u>பதிவு தபால் மூலம்</u>

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண். 19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம்,
சென்னை-600035, தொலைபேசி எண் 044-29515580

**<u>கடித எண். SA 8286/C/2020 நாள் 18.06.2021</u>**

பெறுநர்
திரு. பெ. கோகுல், த/பெ. பெரியசாமி,
45, சத்திரம் தெரு,
பாப்பாரப்பட்டி அஞ்சல்,
பென்னாகரம் வட்டம்,
தருமபுரி மாவட்டம் - 636809. (இ)

அய்யா,

பார்வை:- தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் வழக்கு எண். **SA 8286/C/2020**

-----------

பார்வையில் குறிப்பிட்டுள்ள தங்களது மனு சம்மந்தமான தகவல்களை **<u>09.07.2021</u>**-க்குள் வழங்குமாறு பொதுத் தகவல் அலுவலர் பணிக்கப்பட்டுள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் எவ்வித பதிலும் வழங்கப்படவில்லை என்றாலோ அல்லது வழங்கப்படும் தகவல்கள் முழுமையாக அமையவில்லை என்றாலோ **<u>26.07.2021</u>**-க்குள் ஆணையத்திற்கு கடிதம் மூலம் தங்களது கைப்பேசி எண்ணையும் குறிப்பிட்டு கீழ்க்கண்ட முகவரிக்கு தெரிவிக்குமாறு மனுதாரர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**மாநில தகவல் ஆணையர்,**
**C - பிரிவு, எண்.19, அரசு பண்ணை இல்லம்,**
**தமிழ்நாடு தகவல் ஆணையம்,**
**பேன்பேட், நந்தனம், சென்னை** - 600 035.

தங்கள் நம்பிக்கையுள்ள

அரசு சார்புச் செயலாளர்

**<u>நகல்</u>**
<u>பொதுத் தகவல் அலுவலர்/</u>
பவர்கிரிட் கார்பரேஷன் ஆப் இந்தியா,
தருமபுரி மெயின் ரோடு,
திருப்பத்தூர் மாவட்டம் - 635 601.

தகவல் அறியும் உரிமை சட்டம் 2005ன் கீழ் விண்ணப்பம் [redacted]
இப்புகார் அட்டையுடன் கூடிய பதிவு அஞ்சல்

அனுப்புநர்

கோவிந் த/பெ சி. பெரியசாமி
45, சுதந்திர வீதி
பாப்பாரப்பட்டி (அ)
பென்னாகரம் (வ)
தருமபுரி (மா) - 636809

பெறுநர்

உயர்திரு பொது தகவல் அலுவலர் அவர்கள்
பவர்கிரிட் கார்பரேஷன் ஆப் இண்டியா
தருமபுரி மெயின் ரோடு
திருப்பத்தூர் - 635601

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் தகவல்கள் கோருதல் சார்பாக - கீழ்கண்ட தகவல் அளிக்கும் படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்

1] பவர்கிரிட் கார்பரேஷன் ஆப் இண்டியா லைன் மின் கோபுர எண் 78/0, 79/0, 80/0 [Fundation of Erection] வேலைபாடுகளின் போது தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், கித்திரெயாப்பனஹள்ளி கிராம பட்டா எண்கள் 934, 1022, 1328, 577, 2468 1000, கொண்ட நிலங்களுக்கு பயிர், செடி மற்றும் மரங்கள் ஆகியவற்றுக்கு இழப்பீடு தொகை வழங்கியுள்ளீர்களா? அவ்வாறு வழங்கியிருப்பின் அது குறித்த விவரங்களின் தகவல்களை நகல் வடிவில் வழங்கவும்.

2] மேற்கண்ட பட்டா எண் கொண்ட நிலங்களுக்கு பவர்கிரிட் கார்பரேஷன் ஆப் இண்டியாவால் வழங்கப்பட்ட TPR பதிவேட்டின் Carbon அறிக்கைகளான (i) TPR புத்தகத்தின் அறிக்கை (ii) திருப்பத்தூர் அலுவலக நகல்களை வழங்கவும்.

[redacted]

(3) TPR 105 புத்தகத்தின் முதல் 10 பக்கங்களின் Carbon நகல்களை (ஒளிநகல்) வழங்கவும்.

(4) TPR 38 Notice Number: T 1869 (TPR மற்றும் CCTC) பதிவேட்டின் மேற்கண்ட எண் கொண்ட பக்கத்தின் ஒளிநகலினை வழங்கவும்

(5) TPR 38 Notice No: T 1861, TPR 38 Notice No. T 1853, TPR 38 Notice No: T 1887, TPR 37 Notice No. T 1845, TPR 37 Notice No: T 1847, TPR 37 Notice No: T 1838, TPR 105 Notice No. T 1506, TPR 105 Notice No. T 1507, மேற்கண்ட TPR பதிவேட்டின் பக்கங்களை கொண்ட Carbon ஒளிநகல்களை வழங்கவும் (ம்) CCTC பதிவு நகல்கள்.

(6) பவர்கிரிட் கார்ப்பரேஷன் ஆப் இண்டியாவால் வழங்கப்படும் TPR மற்றும் CCTC பதிவேட்டில் ஒரே பக்கத்தில் பயிர் மற்றும் மரங்களுக்கு இழப்பீடு விவரங்கள் வழங்கப்படுகிறதா [Notice]

(7) தேனி மாவட்டம், பெரியகுளம் (வ) ~~[illegible]~~ ஒட்டுப்போட்ட கன்றுகளுக்கு இழப்பீடு தொகை 800 kV (ஒட்டுப்போட்ட கன்றுகளுக்கு) நிர்ணயிக்கப்படுகிறது. [(i) தோட்டக்கலை அலுவலர்கள் பார்வையிட்டு தொகை நிர்ணயிக்கப்படுகிறதா? (ii) பவர்கிரிட் கார்ப்பரேஷன் ஆப் இண்டியாவே தொகை நிர்ணயம் செய்யப்படுகிறதா அது குறித்த விவரங்களை வழங்கவும்.

(8) 800 kV Powergrid Corporation of India 79/0, 80/0, 78/0, மரங்களுக்கு இழப்பீடு தொகை வழங்கப்படும் போது கிராம நிர்வாக அலுவலரிடம் அடங்கல் சான்று பெறப்படுகிறதா? மரங்களுக்கு இழப்பீடு தொகை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது. அது குறித்த விவரங்களை வழங்கவும்.

[9] பவர்கிரிட் 800 kV வேலைபாடுகளின் போது பயிர்

மற்றும் மரங்கள் சேதார ஈடு [damage] TPR, Notice உதவி செயற்பொறியாளர்கள் [AE] அவர்களால் வழங்கப்படும் சேதார ஈடு பயிர் (ம) மரங்கள் சேதார மதிப்பீடு செய்து வழங்கப்படுகிறதா? (அ) பயிர், மரங்களை சேதார மதிப்பீடு செய்து சேதார ஈடு வழங்கப்பட்டு வருகிறதா அது குறித்த விவரங்களை வழங்கவும்.

[10] பவர்கிரிட் 800 kV, 78-79, 79-80, 80-81 [string & bowstay, stringing] வேலைபாடுகளின் போது [டவர் எண்கள், 984, 2468 1022, 1328, 577, 1000] எந்தெந்த இடங்களுக்கு பயிர் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது? அவ்வாறு வழங்கியிருப்பின் அவற்றின் TPR பதிவேடு Carbon நகல்கள் (ம) இருப்பத்தார் அலுவலக நகல், CCTC ஆர்டர்கள் ஆகியவற்றை வழங்கவும்.

[11] பவர்கிரிட் 800 kV வெட்டப்பட்ட தென்னை மரங்களுக்கு கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல் மதிப்பீட்டு இழப்பீட்டு தொகை வழங்கப்படுகிறதா? வெட்டப்பட்ட செடிகளுக்கு அடங்கல் மதிப்பீடு 79/10 [Foundation] வழங்கப்பட்டது. இருப்பின்

[12] பவர்கிரிட் 800 kV வெட்டப்பட்ட மரங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இழப்பீடு தொகை விவரங்களை அளிக்கவும்.

[13] பவர்கிரிட் 800 kV, TPR பதிவேட்டில் பயிர் நில இழப்பீடு அளவுகள் மாறுதல் [original to Carbon copy] மற்றும் செய்ய powergrid corporation of India அதிகாரம் யாருக்கு? [original notice - Carbon copy]

[14] பவர்கிரிட் 800 kV வெண்ணாகரம் poultry farm & pigeon farm ஒரு சதுர அடிக்கு நிர்ணயிக்கப்பட்ட இழப்பீடு தொகை விவரங்களை அளிக்கவும்.

[redacted]

[15] பவர்கிரிட் 800 kV மின்கோபுர வேலைபாடுகள்.

பக்க கோடுகள் கட்டபடும்போது ஏற்படும் பயிர் இழப்பீடு (ஏ. அகலம் மீட்டரில் குறிப்பிட்டு வழங்கவும்

[16] பவர்கிரிட் 800 kV [ Foundation, Erection, backstay, Stringing ]ன் ~~போது~~ ஏழை விவசாயிகளுக்கு powergrid ஆல் வழங்கபடும் Approach ( வழிபாதையின் ) side அகலம் அளவுகளை மீட்டரில் வழங்கவும்

[17] பவர்கிரிட் 800 kV ஏழை விவசாயிகளுக்கு வழங்கபடும் சேதார சான்றில் வழங்கபடும் length breadth அளவுகள் தோராயமாகவே அளவிடபட்டு வருகின்றனவா? துல்லியமாக அளவிடபட்டு பதிவிடபடுகிறதா TPR பதிவேட்டின் விபரங்களை வழங்கவும்.

[18] பவர்கிரிட் 800 kV மின் கோபுர இணைப்பு கம்பிகளுக்கு அடியில் வருங்காலங்களில் தென்னை மற்றும் உயரமாக வளரும் மரங்கள் வளர்ப்பதற்கு ஏதாவது நிபந்தனைகள் உள்ளனவா?

[19] 800 kV மின்கோபுர மின் இணைப்புகளுக்கு அடியில் உள்ள நிலங்களுக்கு நில இழப்பீடு வழங்கபடுகிறதா?

[20] 800 kV மின்கோபுர மின் இணைப்புகள் செல்லும் ஏற்படும் இடையூறுகள் மற்றும் 10.5 மீட்டருக்கு கிணறு, புறா மற்றும் அடுக்கான கிணறு ஆகியவற்றிற்கு சேதாரம் மற்றும் இழப்பீடு ஏற்படுகின்றனவா? ஏற்படின் அது குறித்த விரிவான விபரங்களை அளிக்கவும்.

[21] powergrid 800 kV Stringing வேலைபாடுகள் நடந்து எத்தனை நாட்களுக்குள் TPR பதிவேடு சான்று இழப்பீடு சான்று வழங்கபடவேண்டு

(*) நான் மேலே கோரிய தகவல்களில் ஏதாவதும் தகவல்களானது, பிரிவு-8 (i) (j)-ல் வரம்புரையாக சொல்லப்பட்டவை போல்து நாடாளுமன்றத்திற்கோ (அல்லது) ஒரு சட்டமன்றத்திற்கோ மறுக்கப்பட ... தகவல்களாக ...

இணைப்பு-2

பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)

மாநிலத் தகவல் ஆணையம், தீர்மானிக்கிற நேரத்தில், 7ஆம் பிரிவின் (1)ம் உட்பிரிவின்படி குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் நியாயமான காரணம் எதுவுமின்றி, தகவலுக்கான விண்ணப்பம் ஒன்றினைப் பெறுவதற்கு பொதுத் தகவல் அலுவலர் மறுக்கிறார் அல்லது தகவலை அளிக்க மறுக்கிறார் என்ற கருதுகிறவிடத்து, அல்லது தகவலுக்கான கோரிக்கையினை கெட்ட எண்ணத்துடன் மறுக்கிறார் என்று அல்லது தவறான, முழுமையற்ற, அல்லது திசைதிருப்பக்கூடிய தகவலினை வேண்டுமென்றே அளிக்கிறார் என்று அல்லது கோரிக்கையின் பொருளாக இருந்த தகவலை அழிக்கிறார் என்று அல்லது தகவல் அளிப்பதை எந்த முறையிலும் தடுக்கிறார் என்று கருதுகிறவிடத்து, அந்த விண்ணப்பம் பெறப்படும் வரை அல்லது தகவல் அளிக்கப்படும் வரை, ஒவ்வொரு நாளுக்கும், இருநூற்று ஐம்பது ரூபாயினை பணத்தண்டமாக (ரூபாய் இருபத்தைந்தாயிரத்திற்கு மிகாமல்) விதிக்கும் அதிகாரம் பெற்றது.

பொதுத் தகவல் அலுவலர் நியாயமான காரணம் எதுவுமின்றி, விடாப்பிடியாகவும் 7ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் படி குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் தகவலுக்கான விண்ணப்பம் ஒன்றினைப் பெறத் தவறுகிறார் அல்லது தகவலை அளிக்காதிருக்கிறார் அல்லது தகவலுக்கான கோரிக்கையினை கெட்ட எண்ணத்துடன் மறுக்கிறார். அல்லது தவறான, முழுமையற்ற அல்லது திசை திருப்பக்கூடிய தகவலை வேண்டுமென்றே அளிக்கிறார் அல்லது கோரிக்கையின் பொருளாக இருந்த தகவலினை அழிக்கிறார் அல்லது தகவலை அளிப்பதை எந்த முறையிலும் தடுக்கிறார் என்று மாநிலத் தகவல் ஆணையம் கருதுகிறவிடத்து, மாநிலப் பொதுத் தகவல் அலுவலருக்கு எதிராக அவருக்குப் பொருந்தத்தக்க பணிவிதிகளின் படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரை செய்யும் அதிகாரம் பெற்றது.